# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.140/2021

வாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேஸ்வரி | வா.சா.–1 | |
| க/பெ. | ஜெகதீசன் | | |
| கிராமம் | சின்னசெட்டிக்குறிச்சி | தொழில் | விவசாயம் |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 53 |

---

முதல் விசாரணை 24–10–2025.

நான் இந்த வழக்கின் வாதி. வாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 05.08.2020ம் தேதியில் காசிராஜன் பெயரில் உள்ள பட்டா உண்மை நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 29.12.2020ம் தேதிய காசிராஜன் என்பவர் எனக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 21.05.2021ம் தேதிய என் பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) கேவியட் மெமோ அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.10.24 16:45:34 +0530